**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 86/2019**

**வா.சா.1 – வீராயி** **12.11.2025**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :-

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1, 2 பிரதிவாதிகளிடம் பாகம் கேட்டு நான் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக 2012 மே மாதம் நான் தினசரி நாளிதழில் ஒரு அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு நான் 2014 ஜுலை மாதம் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எதற்காக தினசரி நாளிதழ் அறிவிப்பு கொடுத்த பின்பு 2 வருடங்கள் கழித்து காலதாமதமாக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் குடும்பத்தில் பேசி முடித்துக்கொள்ளலாம் என்று சொன்னதால் வழக்கை காலதாமதமாக தாக்கல் செய்தேன். எனது வழக்குரையில் குடும்பத்தில் பேசி முடித்துக்கொள்ளலாம் என்பதை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 2012ல் துத்திக்குளம் சர்வே எண் 10/1பி சம்மந்தமாக இந்த 2ம் பிரதிவாதி மீது மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. அந்த சொத்து எனது அப்பா சேதுராமனுக்கு கிரைய பாத்தியமான சொத்து என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது அப்பா சேதுராமன் சொத்துக்கள் பாகம் செய்யப்படாமல் உள்ளது என்று சொல்லவில்லை என்றால் அந்த வழக்கின் சொத்து எனக்கு எனது அப்பா தானமாக கொடுத்த சொத்து ஆகும். 2ம் பிரதிவாதி மானாமதுரை உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு 24/2016 2ம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பாகி அதன் மீது நான் இந்த சார்பு

நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து அந்த மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது அப்பாவின் சொத்து பாகம் பிரிக்கப்படவில்லை என்று சொல்லவில்லை என்றால் அது எனது தனிப்பட்ட சொத்து ஆகும். திருப்புவனம் பிரமனூர் குரூப் சர்வே எண் 33/4, 33/5, 33/6, 33/7 ஆகியவை எனது அப்பா சேதுராமனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களை நான் 3ம் நபர்களுக்கு கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்கள் எனது அப்பா எனக்கு கொடுத்த சொத்துக்கள் என்றால் சரியல்ல. 1990ல் எனது அப்பா இறந்துபோனார். எனது அப்பா இறக்கும் வரை என்னுடன் தான் இருந்தார். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது அப்பா காலத்திற்கு பின்பு நானும் 1, 2 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வந்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது அம்மாவும் அனுபவித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது 1வது லக்க சொத்து எனது அம்மாவிற்கு ஒதுக்கப்பட்டது என்பது உண்மை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு யார் 1ம் லக்க சொத்தை ஒதுக்கினார்கள் என்றால் எனது அந்த சொத்தை அனுபவம் செய்து வந்தார். எனது அப்பா சேதுராமனின் வாரிசாக என்னை விளம்புகை செய்யவேண்டும் என்று மானாமதுரை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்று அதன் அடிப்படையில் வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விபரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு 1, 2 பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்ட விபரம்

எனது அம்மா உயிருடன் இருந்த போதே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனது அப்பா சேதுராமன் சொத்தை பொறுத்து அவர் உயிருடன் இருந்த போதே 11.03.1977ல் ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. பாகம் எழுதினார்கள் ஆனால் அதில் எனது அப்பா கையொப்பம் போடாமல் சென்றுவிட்டார். 1ம் பிரதிவாதியும் 2ம் பிரதிவாதியும் ஒரு பாக முச்சலிக்கா எழுதி கொண்டார்களா என்றால் இல்லை. சொத்தை பிரித்துக்கொண்டு ஒரு பாக முச்சலிக்கா எழுதிக்கொண்டார்கள் அதில் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி எனது அப்பா ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த பாக முச்சலிக்காவின் படி தாவா 1, 2 மற்றும் 12 முதல் 18 லக்க சொத்துக்கள் 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு அவர் அனுபவம் செய்து அவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதுபோல தாவா 4, 5, 6, 8 முதல் 11 லக்க சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டு அவர் அனுபவம் செய்து வந்து அவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 21ம் லக்க சொத்து அய்யாச்சாமி மகன் சுந்தரராஜ், முத்துக்கருப்பன் மகன் சேதுராமன் மற்றும் உறங்காப்புலி ஆகியோர் பெயரில் கூட்டாக பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 21வது லக்க சொத்தில் உள்ள ஓட்டுவீடு 1ம் பிரதிவாதி மனைவி அம்மாளு பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. கூட்டுப்பட்டாவில் உள்ள சுந்தரராஜ் என்பவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் மனைவி அம்மாளுவை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா 21வது லக்க சொத்திற்கு காசிக்கோனார் மற்றும் பெரியசாமிக்கோனார் ஆகியோர் பெயரில் இன்று வரை பட்டா உள்ளது என்றால் சரிதான். 21வது லக்க சொத்தை 2ம் பிரதிவாதி மேற்படியார்களிடமிருந்து வாய்மொழி கிரையம் வாங்கி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா 23வது லக்க சொத்து முழுவதும் செல்வம் மகன் ராதாகிருஷ்ணன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 23வது லக்க

சொத்தில் 16 செண்டை மட்டும் தான் 2ம் பிரதிவாதி தனித்து கிரையம் வாங்கி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.  தாவா 25வது லக்க சொத்து 1ம் பிரதிவாதி மனைவி அம்மாளு பெயரில் இருந்தது என்றால் சரிதான்.  தாவா 25வது லக்க சொத்தை அம்மாளு, அண்ணாதுரை என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.  மேற்படி அண்ணாதுரையை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.  ஏற்கனவே பாகம் பிரித்துக் கொள்ளப்பட்ட சொத்துக்களில் நான் பாகம் கேட்கமுடியாது என்றும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. எனது அப்பா சேதுராமனின் சொத்துக்களை பொறுத்து அவர் உயிருடன் இருந்த போதே 1,  2 பிரதிவாதிகள் பாகம் செய்து கொண்ட விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல.  நான் துத்திக்குளம் கிராமம் சர்வே எண் 10/1பி சம்மந்தமாக நான் தாக்கல் செய்த வழக்கில் 2ம் பிரதிவாதி எதிர்வழக்காடியதால் அவரை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை